இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 74 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஐப்பசி 06 – புதன்கிழமை 23 அக்டோபர் 2024 – சென்னை 20 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 74 : Thiruvalluvar Year - 2055 - Ayppasi 06 - Wednesday 23 October 2024 - Chennai 20 Pages ₹ 5.00





முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.10.2024) நாமக்கல் மாவட்டம், பொம்மைகுட்டைமேட்டில் நடைபெற்ற அரசு விழாவில் 298 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் 134 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 365 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 140 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஆர்.என். ராஜேஷ் குமார், வி.எஸ். மாதேஸ்வரன், கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் கே. பொன்னுசாமி, பி. இராமலிங்கம், இ.ஆர். ஈஸ்வரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா, நகரமைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினர், நாமக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ‘திராவிட மாடல்’ ஆட்சியில் அறிவிக்கப்படும் திட்டங்கள் அனைத்தும் நிச்சயம் நிறைவேறும்!

# நவம்பர் முதல் - மாவட்டந்தோறும் பணிகளை நேரில் கள ஆய்வு செய்கிறேன்!

## நாமக்கல் மாவட்ட அரசு விழாவில் நலத்திட்ட உதவிகளை வழங்கி

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

நாமக்கல்.அக்.23-

**‘திராவிட மாடல்’ ஆட்சியில் அறிவிக்கப்படும் திட்டங்கள் அனைத்தும் நிச்சயம் நிறைவேறும்! எனவும், நவம்பர் முதல் மாவட்டந்தோறும் பணிகளை நேரில் கள ஆய்வு செய்கிறேன்! என்றும் நாமக்கல் மாவட்ட அரசு விழாவில் நலத்திட்ட உதவிகளை வழங்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.10.2024) நாமக்கல் மாவட்டம், பொம்மை குட்டைமேட்டில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய பேருரை வருமாறு:

**“தமிழன் என்றோர் இனமுண்டு! தனியே அவர்க்கொரு குணமுண்டு! அன்பே அவனுடை வழியாகும்! அமிழ்தம் அவனுடை மொழியாகும்!”**

இந்த சிறப்புமிகு பாடலைத் தந்த எழுச்சிமிகு நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார் பிறந்த மண்ணில் மழைச் சாரல்கள் வீசும் இரம்மியமான இந்த மாலைப் பொழுதில் உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

### தலைமைச் செயலகத்துக்கு நாமக்கல் கவிஞர் பெயர் சூட்டி மகிழ்ந்தார் கலைஞர்!

இந்த நிகழ்ச்சிக்கு முன்னால், நாமக்கல் மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்டிருக்கின்ற பூங்காவில் தலைவர் கலைஞர் அவர்களின் சிலையை திறந்து வைத்திருக்கிறேன். நாமக்கல் மாவட்டத்தில் அவர் சிலை அமைவது மிக மிகப் பொருத்தமான ஒன்று. ஏனென்றால், சேலம் மாவட்டத்தில் இருந்து 1997–ஆம் ஆண்டு புதிதாக நாமக்கல் மாவட்டத்தையே உருவாக்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள் தான். தலைநகரில் உள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் மாபெரும் கட்டடத்தை அமைத்து, அதற்கு ‘நாமக்கல் கவிஞர் மாளிகை’ என்று 50 ஆண்டுகளுக்கு முன்னால், பெயர் சூட்டியதும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

ஆரைக்கல் என்றும், நாமகிரி என்றும் அழைக்கப்பட்டு, இன்று ‘நாமக்கல்’ என பெயர் பெற்றுள்ள நகர் இது! லாரி கட்டமைப்பு மூலமாக, இந்தியா முழுமைக்கும் சரக்குப் போக்குவரத்திற்கு அடித்தளமாக விளங்குகின்ற மாவட்டம் இந்த நாமக்கல்!

### தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளம், இந்த நாமக்கல்!

கோழி வளர்ப்பு, முட்டை உற்பத்தி, சவ்வரிசி ஆலைகள் என்று பொருளாதாரத்தை வளர்க்கும் தொழில்களும், நன்செய், புன்செய் நிலங்களும் நிறைந்த செழிப்பான பூமி இது! வியர்வை சிந்தும் உழைப்பாளர்கள், மண்ணைப் போற்றும் உழவர்கள், பாட்டாளித் தோழர்கள், தொழில் முனைவோர்கள் என்று எல்லோரும் சமமாய் வாழக்கூடிய மாவட்டம் இந்த மாவட்டம்! சுருக்கமாகச் சொல்லவேண்டும் என்றால், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அடித்தளம் இந்த நாமக்கல்! அப்படிப்பட்ட இந்த மாவட்டத்தில் இந்த விழாவை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் நம்முடைய



மாவட்டத்தின் அமைச்சர் மதிவேந்தன் அவர்களையும், மாநிலங்களவை உறுப்பினர் என்னுடைய அருமைத் தம்பி ராஜேஸ்குமார் அவர்களையும், மாவட்ட ஆட்சியர் உமா அவர்களையும், மாவட்டத்தின் அதிகாரிகள், அலுவலர்கள் அத்தனை பேரையும் நான் பாராட்டுகிறேன்! மனதார வாழ்த்துகிறேன்!

**ஆதிதிராவிடர் நலத்துறைக்கு அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்த மதிவேந்தன் அவர்கள் சமீபத்தில் பொறுப்பேற்றிருக்கிறார். புதிய பொறுப்பின் மூலமாக நம்முடைய திராவிட மாடல் அரசின் சிறப்பான முன்னெடுப்புகள் விளிம்பு நிலை மக்களுக்குச் சென்றடைவதை அவர் உறுதி செய்வார் என்று நான் நம்புகிறேன்.**

அருந்ததியர் சமுதாய மக்களுக்கு தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்ட 3 விழுக்காடு இட ஒதுக்கீட்டால் கடந்த 15 ஆண்டு காலமாக அவர்களின் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார, சமூக மேம்பாட்டில் பெற்று வரும் மேன்மையைப் பார்க்கும்போது, அந்தச் சட்டத்தை சட்டமன்றத்தில் கொண்டு வந்தவன் என்ற முறையில் மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமைப்படுகிறேன்!

### உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மாநாட்டை சிறப்பாக நடத்திய சாதனையாளர் தம்பி ராஜேஸ்குமார்!

இந்த மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகளில் அக்கறை கொண்டவர், நம்முடைய மாநிலங்களவை உறுப்பினர் தம்பி ராஜேஸ்குமார் அவர்கள்! நகர்ப்புற உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மாநாட்டை, இதே நாமக்கல் மாவட்டத்தில் சிறப்பாக நடத்திக் காட்டிய சாதனைக்குச் சொந்தக்காரர் தம்பி ராஜேஸ்குமார்! நாமக்கல் மாவட்டத்திற்காக திட்டப்பணிகளைப் பெறுவதில் முனைப்பாக இருக்கக்கூடியவர்! என்னை சந்திக்க வரும்போதெல்லாம், அவர் கையில் ஒரு கடிதம் நிச்சயமாக இருக்கும்.

அதில் நாமக்கல் மாவட்டத்திற்கு சாலை வேண்டும், பஸ் ஸ்டாண்ட் வேண்டும், கூட்டுறவு வங்கி வேண்டும், இப்படி ஏதாவது ஒரு கோரிக்கையுடன்தான் என்னை சந்திப்பார். பார்க்க, அமைதியாகவும், செயலில் புயலாகவும் இருக்கும் தம்பி ராஜேஸ்குமார், நான் வளர்த்த இளைஞரணியின் Product! சிறப்பாக செயல்படும் அவருக்கும், அவருக்கு துணை நிற்கும் நிர்வாகிகளுக்கும் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகள்!

### மாவட்ட ஆட்சியர்களுக்கு சிறந்த எடுத்துக் காட்டு, ஆட்சியர் உமா!

அடுத்து, நம்முடைய மாவட்ட ஆட்சியர் டாக்டர் உமா ஐ.ஏ.எஸ்., அவர்கள். அவர் மிகச் சிறப்பாக பணியாற்றி வருவதை, நான் தொடர்ந்து

தொடர்ச்சி 3– ஆம் பக்கம்

# நாமக்கல்லில் முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலை!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

## சேலம் விமான நிலையம் மற்றும் நாமக்கல்லில் முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு!

நாமக்கல், அக். 23 –

**நாமக்கல் முதலைப்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருவுருவச் சிலையை கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். தொடர்ந்து முதல்வர் அவர்கள் பொம்மைகுட்டைமேட்டில் நடைபெற்ற அரசு விழாவில் பல்வேறு திட்டப் பணிகளை அடிக்கல் நாட்டியும், திறந்து வைத்தும் இருபதாயிரம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் சிறப்புரையாற்றினார். நாமக்கல் வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழியெங்கும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாமக்கல் மாவட்டத்தில் நேற்று சுற்றுப்பயணம் மேற்கொண்டார். நாமக்கல் மாநகராட்சிக்கு உட்பட்ட செல்லப்பா பூங்காவில், நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, பொம்மைகுட்டைமேட்டில் நடைபெறும் அரசு விழாவில், பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 20 ஆயிரம் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இதனைத்தொடர்ந்து, நாமக்கல் அருகே முதலைப்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு புதிய பேருந்து நிலையத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று காலை சென்னையிலிருந்து நாமக்கல் புறப்பட்டு சென்றார். விமானம் மூலம் சேலம் வந்த முதலமைச்சருக்கு, விமான நிலையத்தில் கழகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்டச் செயலாளரும், சுற்றுலாத்துறை அமைச்சருமான இரா.இராஜேந்திரன் தலைமையில் சேலம் விமான நிலையத்திலிருந்து ஸ்ரீநகர் கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை வரை, வழி நெடுகிலும் மேளதாளங்கள் முழங்க வரவேற்பு அளிக்கப்பட்டது. கொண்டலாம்பட்டி ரவுண்டானா பகுதியில், 200க்கும் மேற்பட்டோர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அதனைத் தொடர்ந்து நாமக்கல் வருகை தந்த முதல்வர் அவர்களுக்கு வழியெங்கும் கழகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். வழியெங்கும் திரண்டிருந்த மக்களை பார்த்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உற்சாகமாக கையை அசைத்து தனது மகிழ்ச்சியினை பகிர்ந்து கொண்டார்.

இதனைத் தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாமக்கல் முதலைப்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர்கள் எ.வ.வேலு, இரா. இராஜேந்திரன், டாக்டர் ம.மதிவேந்தன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம், டி.எம். செல்வகணபதி எம்.பி., கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி., மதுரா செந்தில் உள்ளிட்ட சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர் திரளாகப் பங்கேற்றனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.10.2024) நாமக்கல் மாவட்டம், நாமக்கல் மாநகராட்சி, சிலம்பகவுண்டர் பூங்காவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையினை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஆர்.என். ராஜேஷ் குமார், கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் கே. பொன்னுசாமி, பி. இராமலிங்கம், நாமக்கல் மாவட்ட அவைத் தலைவர் மணிமாறன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.